**திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது)**
**அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை: Er.ச.ஜெயப்பிரித்தா, M.E.,**

ந.க.அ3/4818/2019 நாள்: 22.09.2020

**பொருள்::** பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகு - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணயம், தேர்வு-IV (2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018) நேரடி நியமன தட்டச்சர்கள் பணியினை வரன்முறை செய்து - ஆணையிடல்.

**பார்வை ::**
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், கடிதம் எண்: 1653/PSD-A/2019, நாள்: 21.02.2019.
2. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க அ3/4589/2019 நாள்: 01.03.2019.
3. தொடர்புடைய ஆவணங்கள்.

*******

**ஆணை:**

திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகிற்கு, பார்வை 1-ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத் தொகுதி தேர்வு-IV (2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018)-இன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்சமயம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், தட்டச்சராகப் பணிபுரிந்துவரும் திரு.மா.கணேஷ்குமார் என்பவருக்கு தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணியாளர்களுக்கான விதிகளின் விதி 23(அ)(1)-ன்படி தட்டச்சர் இனத்தில் ஒருங்கிணைந்த சார்நிலை பணிகளுக்கான தேர்வு-IV 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 தொடர்பாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட நீதிப்பேராணை வழக்குகளில் வெளியிடப்படும் தீர்ப்புரைக்குட்பட்டு, 06.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவம் துவங்கி விளம்புகை செய்தும் இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

ஒம்/- ச.ஜெயப்பிரித்தா,
மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது),
திருச்சிராப்பள்ளி.

/உத்தரவுப்படி/

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்:
திரு.மா.கணேஷ்குமார்,
தட்டச்சர்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி.
நகல்: மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது), திருச்சிராப்பள்ளி
நகல் : தலைமைக் கணக்கர் ஜே-பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி.
நகல்: மாவட்ட ஆட்சித் தலைவர்/மாவட்ட வருவாய் அலுவலரின் முகாம் எழுத்தர்.
நகல்: அ3 - இருப்பு கோப்பு.

Scanned by CamScanner